ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2328/06 - 2023 අප්‍රේල් මස 19 වැනි බදාදා - 2023.04.19

2328/06 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KSWD&EIP/ACQ/DWC/02.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2020/LRB/181.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

*(கொலொன்னாவை மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், வெல்லம்பிட்டி, விவேக்காராம மாவத்தையை அண்டியதாக அமைந்துள்ள மகக் கும்புர மற்றும் கித்தம்பகுவ எனும் சதுப்பு நிலக் காணியில் நீர்த் தடாகமொன்றை அமைக்கும் பொருட்டு காணித் துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)*

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 508 - கித்தம்பகுவ கிராம அலுவலர் பிரிவில் வெல்லம்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.03.08 ஆந் திகதிய கொ:10036 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, 2, 3 எனக் காட்டப்பட்ட 1.4323 ஹெக்டயார் முழு விஸ்தீரண முடைய கீழ் விபரிக்கப்பட்ட மூன்று (03) காணித் துண்டுகள்.

1. துண்டு இல. 1

காணியின் பெயர்: மகக் கும்புர மற்றும் கித்தம் பகுவ; விபரம்: வீட்டுத் தோட்டமும் சதுப்பு நிலமும்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கொழும்பு, காலி வீதி, இல. 90 எனும் முகவரியில் அமைந்துள்ள செலான் வங்கி (தனியார்) கம்பனி; விஸ்தீரணம்: 0.6966 ஹெக்டயார்.



*இவ்அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: - ; விபரம்: கால்வாய்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0498 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 3**

காணியின் பெயர்: மகக் கும்புர மற்றும் கித்தம் பகுவ; விபரம்: வீட்டுத் தோட்டமும் சதுப்பு நிலமும் நிலையான கட்டிடமொன்று காணப்படுகின்றது; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கொழும்பு, காலி வீதி, இல. 90 எனும் முகவரியில் அமைந்துள்ள செலான் வங்கி (தனியார்) கம்பனி; விஸ்தீரணம்: 0.6859 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் கொலொன்னாவை மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கொலொன்னாவை மழைநீர்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல்
மேம்படுத்தல் கருத்திட்டம்,
கொலொன்னாவை
பிரதேச செயலாளர் பிரிவு.

கொலொன்னாவை மழைநீர் வடிகாலமைப்பு
மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்
கருத்திட்டத்தின் காணி எடுத்துக்
கொள்ளல் அலுவலகம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.
2023, ஏப்பிறல் 18.

EOG 04 - 0118